ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2196/47 - 2020 ඔක්තෝබර් 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.08

***2196/47 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்று காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், J/150 மாதகல் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், மாதகல் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால்தயாரிக்கப்பட்ட 2014.12.12 ஆந் திகதிய மற்றும் Ya/SND/2014/58 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

*01.* **துண்டு 'A' - நாவற்புலம், காட்டுப்புலம், போதிப்புலம் மற்றும் போதியடைப்பு - விஸ்தீரணம் : 1.5850 ஹெக்டயார்**

வடக்கு : கடற்கரை ; கிழக்கு : P. P. Ya 2739 வரைபடத்தின் துண்டு இல. 01 ; தெற்கு : வீதி (வீ. அ. அ.) ; மேற்கு : வைத்தி அம்பலவாணர் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் போதிப்புலம்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/4/2013/D/231.
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 12.

10- 897

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின்

பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்று காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், கந்துபிட்ட பற்று வடக்கு சிறு பிரிவில், இல. 69C, பியோவெல கிராம அலுவலர் பிரிவில், பியோவெல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.08.15 ஆந் திகதிய மற்றும் KE/GLG/2019/88 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு 'A' - வீராகொடவத்தை - விஸ்தீரணம் : 0.4047 ஹெக்டயார்**

வடக்கு : தித்தவெரலுகஹலந்த வத்தை, அமனாவலவத்தை மற்றும் வீராகொட வத்தை ; கிழக்கு : வீராகொடவத்தை ; தெற்கு : வீதி ; மேற்கு : வீதி மற்றும் வீதி (பிரதேச சபை).

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/17/2019/LO/59.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 12.

10- 898

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.